DOI: 10.31357/fhssmph.2015.00061

# இலங்கையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி

ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரன்

முதுதத்துவமாணி கல்வி நெறியைப் பூர்த்தி செய்வதற்காக

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்

கற்கைகள் பீடத்திற்கு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2015

# The Evolution of Television Technology in Sri Lanka

## A Survey

**Srithayalan Sribreindran**

Thesis submitted to the University of Sri Jayewardenepura for the

award of the Degree of Master of Philosophy

in mass communication

2015

# ஆய்வாளரின் உறுதியுரை

எனது முதுதத்துவமாணி பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்படும் இவ்வாய்வுக்கட்டுரையானது எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் ஏதாவதொரு பட்டத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட எவ்விடயத்தையும் தழுவியதாக அமையவில்லை என்பதையும் இதற்கு உசாத்துணையாகப் பயன்படுத்திய மூலங்கள் உரியமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதையும் இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் எனது சொந்தக் கருத்துக்கள் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

04/04/2016......

திகதி

...............................

ஆய்வாளர்

ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரன்

1301HU2011007

## மேற்பார்வையாளரின் உறுதியுரை

இவ்வாய்வானது ஶ்ரீதயாளன் ஶ்ரீபிருந்திரன் என்பவரால் முதுதத்துவமாணி கல்வித் தகைமைக்காக எனது வழிகாட்டலின் கீழ் எழுதப்பட்டதாகும்.

இது வேறு எந்தவொரு பட்டத்திற்காகவும் வழங்கப்பட்டதன்று என உறுதி கொள்கிறேன்.

04.04.2016

..................................

திகதி

..............................................

மேற்பார்வையாளர்

## மேற்பார்வையாளரின் சான்றிதழ்

இவ்வாய்வுக் கட்டுரை தொடர்பாக பரீட்சகர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக் களையும் ஆலோசனைகளையும் உள்வாங்கி உருவாக்கப்பட்டுள்ளது.

04.04.2016

......................

திகதி

......................................

மேற்பார்வையாளர்

# The evolution of Television Technology in Sri Lanka

**a Survey**

**SRITHAYALAN SRIBREINDRAN**

## ABSTRACT

The purpose of my research is to analyse the gradual development of television technology in Sri Lanka from 1979 to 2014 and make my recommendation for further improvement in this field.

Further development in this regard is essential for both the television creative artistes and the viewers. Technological infrastructure required is being laid down to achieve the aims and objectives collectively. The following proposals are made to carry off the tasks forward.

* Completely switching over to digital technology from the old analog technology.
* Creating a high quality technological environment.
* Setting up committees to encourage the use of sophisticated equipment.
* Improving the creative personality of the technicians.
* Initiating a series of discussion for the exchange of ideas for the planning and creation of a television technology foundations to suit the Sri Lankan environment.

**The source of data for the study are of two types.**

(a) * Sharing the experience of programme producers and technicians.

* Discussions and interviews with viewers.

* Data collected by the observation of the control rooms, transmitting studios, transmitting wagons, relaying towers, archives of records.

(b) * Date collected through questionnaires from programme producers, viewers and technicians.

* Information collected from the libraries of various universities, national archives department, NGOS' publications, recorded events and information collected from official web - sites.

**The study consists of five chapters.**

1. Research Methodology.
2. The basics of the concept of television technology in mass communication.
3. Television technology in Sri Lanka in the initial years and its development.
4. Private Televisions and their technological advancements.
5. Recommendations and conclusion.

**Chapter – 1** outlines essentially the aims of the research and the hypothesis propounded. The main evidences and the data collection tools are also listed.

**Chapter – 2** Briefly examines the technological development of mass communication at the global level.

**Chapter - 3** the inception of television broadcasts through the independent television net - work and the creation of the Rupavahini corporation with Japanese aid are discussed. Their impact on the general public is also analyzed.

**Chapter - 4** The changes in political scenario led to the creation of more independent television net-works. Their gradual development; sophisticated equipment, the feed back from the viewers and the recent switch over to the digital technology are analyzed. The data required for the study from the technicians and programme producers. obtained through questionires and interview one presented.

**Chapter - 5**

(i) Immediate switch over to digital technology.

(ii) Existing staff be provided training in digital technology and the new recruits must posses digital ability.

(iii) The hindrance from anywhere for the implementation of these should be removed.

(iv) Sri Lanka T.V technology must be abreast global level.

(v) Interaction and integration of social media through the viewers be encouraged and feed - back obtained.

There certainly is a remarkable growth in the Sri Lankan television technology. It is not comparable to the global standards. All concerned players and the government should unite to achieve the global standard.

# நன்றி

வெகுசன தொடர்பாடல் துறையில் முதுதத்துவமாணிப் பட்ட ஆய்வினை இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்ளவேண்டும் என்ற என் விருப்பினையும் முயற்சியையும் பூர்த்திசெய்ய உறுதுணையாயிருந்த ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழக சிங்கள மற்றும் வெகுசன தொடர்பாடல் துறைத்தலைவர் பேராசிரியர் ரத்னசிறி அறங்கல அவர்களுக்கும், பட்டப்பின் கற்கைநெறிக்கான இணைப்பாளர் பேராசிரியர் சமான் சந்திரரணசிங்க அவர்களுக்கும், பட்டபின் கற்கைகள் பீடாதிபதி, உறுப்பினர்கள் மற்றும் மூதவைக்கும் எனது முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டின் மேற்பார்வையாளர்களாக பேராசிரியர் தம்மிக கங்காநாத் திசாநாயக்காவும் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனும் விளங்கியுள்ளனர். எனது இந்தப் புலமைசார் ஆய்வு திருப்திகரமான முறையில் அமைவதற்கு இவர்களிருவரும் தங்களது அறிவும் ஆற்றலும் நிறை ஆலோசனைகளைத் தொடர்ச்சியாக வழங்கி வந்தனர். குறிப்பிட்ட காலத்துக்குள் ஆய்வு நெறிமுறை தொடர்பாக என்னைப் பல வழிகளில் பயிற்றுவித்ததோடு மிகுந்த வேலைப்பளுக்களுக்கும் மத்தியிலும் எனது ஆய்வைப் பல முறைகள் திருத்தம் செய்து வழிப்படுத்தியவர்கள் இவர்கள்.

இந்த ஆய்வினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் வேகத்துடன் நான் அடிக்கடி ஏற்படுத்திய சிரமங்களையெல்லாம் பெருமனங்கொண்டு சகித்துக்கொண்டு இவ் ஆய்வினைப் பூர்த்திசெய்யக் காரணமாயிருந்த மேற்பார்வையாளர்களுக்கு எனது மரியாதையுடன் கூடிய நன்றியினைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

மேலும், எனது இந்த ஆய்வு முயற்சிக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினது சிங்கள மற்றும் வெகுசனத் தொடர்பாடல்துறைத் தலைவர், பட்டபின் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி, பிரதிப் பதிவாளர், மற்றும் ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்த ஆய்வு முயற்சி திருப்திகரமான முறையில் அமையவேண்டும் என்று எப்போதும் என்னைத் தூண்டுகின்ற எனது தந்தையாருக்கும் இதர குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் இவ்வாய்வுப் பிரதியை ஒளியச்சுச் செய்து உதவிய திருமதி கார்த்தியாயனி சர்மா அவர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

## பொருளடக்கம்


Abstract

நன்றி

பொருளடக்கம்

**இயல் ஒன்று**

அறிமுகம்

1.1. ஆய்வுக்கான முன்னுரை

1.2. ஆய்வு அறிமுகம்

1.3. ஆய்வுக்கான காரணம்

1.4. ஆய்வின் வரையறைகள்

1.5. ஆய்வின் நோக்கங்கள்

1.6. கருதுகோள்கள்

1.7. சார்பியல் மூலங்கள்

1.8. ஆய்வு முறையியல்

1.9. ஆய்வு அமைப்பு

**இயல் இரண்டு**

வெகுசனத் தொடர்பாடலில் தொலைக்காட்சித் தொழில்நுட்பம்

2.1. அறிமுகம் - கருத்துநிலை அடிப்படைகள்

2.2. தொலைக்காட்சி ஊடகத்தின் தொழில்நுட்பரீதியான வளர்ச்சிகள்

2.2.1. தொலைக்காட்சி ஒளிபரப்பு தொழில்நுட்பத்தின் அடிப்படைகள்

2.2.2. தொலைக்காட்சிப் பெட்டிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

2.2.3. தொலைக்காட்சி ஒளிப்பதிவுக் கருவியின் (கமரா) தோற்றமும் வளர்ச்சியும்

2.2.4. ஒளிப்பதிவும் படத்தொகுப்பும்

2.3. தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின் போக்கு

**இயல் மூன்று**

இலங்கையில் தொலைக்காட்சி ஊடகங்களின் தோற்றக் காலத் தொழில்நுட்பங்களும் வளர்ச்சியும்

3.1. இலங்கையில் வெகுசனத் தகவல் பரிமாற்றமும் வெகுசன ஊடகங்களும்

3.2. இலங்கையில் தொலைக்காட்சி ஊடகத்தின் தோற்றம்

3.2.1. இலங்கைச் சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவை

3.2.2. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

3.3. இலங்கை அரச தொலைக்காட்சிகளின் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சிகள்

3.4. இலங்கைத் தொலைக்காட்சிகளில் எண்மத் தொழில்நுட்பம்.

**இயல் நான்கு**

தனியார் தொலைக்காட்சிகளின் தோற்றமும் தொழில்நுட்ப ரீதியிலான வளர்ச்சியும்

4.1 அறிமுகம் (தனியார் தொலைக்காட்சி ஊடகத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகள்)

4.2. தனியார் தொலைக்காட்சி ஊடகங்கள்

4.2.1. சுவர்ணவாஹினியின் தொழில்நுட்ப வளர்ச்சி

4.2.2. எம்.ரீ.வி. ஊடக வலையமைப்பின் தொழில்நுட்ப வளர்ச்சி

4.2.3. ரீ.வி. தெரணவின் தொழில்நுட்ப வளர்ச்சி

4.2.4. ஹிரு ரீவியின் தொழில்நுட்ப வளர்ச்சி

4.3. தொலைக்காட்சி ஒளிபரப்பில் தொழில்நுட்ப ரீதியிலான வளர்ச்சிகள்

4.4. தொலைக்காட்சிப் படைப்பாக்கங்களில் தொழில்நுட்பரீதியிலான வளர்ச்சிகள்

**இயல் ஐந்து**

பரிந்துரைகளும் முடிவுரையும்

**பின்னிணைப்புக்கள்**

பின்னிணைப்பு – 01 வினாக்கொத்து

பின்னிணைப்பு – 02 ஆய்வுக்குப் பயன்பட்ட நிழற்படங்கள்

பின்னிணைப்பு – 03 ஆய்வுக்காக நேர்முகம் காணப்பட்டோர்கள்

இலங்கைத் தொலைக்காட்சி ஒளிபரப்புகள்

பின்னிணைப்பு – 04 உசாத்துணை நூற்பட்டியல்

வலையமைப்புக்கள்

பின்னிணைப்பு – 05 கலைச்சொற்கள்

## 1.1. ஆய்வுக்கான முன்னுரை

‘‘இலங்கையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி’’ எனும் தலைப்பிலான இந்த ஆய்வு இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் உருவாக்கப்பட்ட கால முதல் படிமுறையாக இடம்பெற்ற தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சிகள், தொழில்நுட்பவியலாளரின் பங்குப்பணிகள், தொலைக்காட்சியின் தொழில்நுட்ப வளர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ள தடைகள் பற்றிய கள ஆய்வுகள், நேர்காணல்கள், நூற்குறிப்புக்கள், செயன்முறை வடிவில் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். இலங்கையின் தொலைக்காட்சித் தொழில்நுட்ப வளர்ச்சியின் தன்மையும், அதன் பயன்பாடுகளும் இன்றியமையாமையும் ஆராயப்பெற்றுள்ளன.

இலங்கையில் பத்திரிகை ஊடக வளர்ச்சிப்போக்குகள் பற்றிய ஆய்வுகள் போதிய வளர்ச்சியை எட்டி வருகின்றன. குறிப்பாக சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகை ஊடகங்கள் தொடர்பிலான பல்வேறுபட்ட ஆய்வுகள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இலங்கையில் தொலைக்காட்சி ஊடகத்தின் ஆரம்பம் பற்றி தெரிந்துகொள்ளவும் அதன் வரலாறு, கோட்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளவும் தொலைக்காட்சி ஊடகத்தின் முக்கியத்துவத்தினையும் அது சமூக, தேசிய உருவாக்கத்தினை எவ்வாறு மேற்கொள்கிறது என்பதைக் கண்டுகொள்ளவும் அதனது வகைப்பாட்டினையும் வளர்ச்சியை தெரிந்துகொள்ளவும் சில நூல்களும் சஞ்சிகைகளும் வெளிவந்துள்ளன.

அவற்றுள் பேராசிரியர் திஸ்ஸகாரியவாசம் எழுதிய ‘ஸ்ரீலங்காவில் தொலைக்காட்சி’ என்ற நூல் இலங்கையில் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களின் தோற்றம் பற்றிய வரலாற்றை சிறப்பாக அறிய உதவுகின்றது. அதேபோல இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை சுயாதீன தொலைக்காட்சிகளால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகளும் இலங்கையின் தொலைக்காட்சி சேவைகள் பற்றிக் கூறுகின்றன.

எனினும் இலங்கையின் தொலைக்காட்சிகள் தொடர்பாக வெளிவந்த மேற்குறிப்பிட்ட நூல்களோ, கட்டுரைகளோ இலங்கையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின்

வளர்ச்சி தொடர்பான முழுப் பரிமாணத்தையும் தந்தன என்று சொல்லமுடியாது. எவ்வாறாயினும் இலங்கையில் பயில்நிலையில் உள்ள இலத்திரனியல் ஊடகமான தொலைக்காட்சி ஊடகத்தொழில்நுட்பத்தின் வளர்ச்சிப் போக்குத் தொடர்பான தேவையானதும் எதிர்பார்க்கப்படுவதுமான முதல் ஆய்வாக இது அமைகின்றது.

இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்புகளின் தொழில்நுட்ப மேம்பாட்டுக்கும் உயர்தொழில்நுட்ப வளங்களின் மூலமான தொலைக்காட்சி படைப்பாற்றல்களுக்கும் உந்துசக்தியாக, ‘‘தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி’’ இருக்கிறது. இது பார்வையாளர்களுக்கு அவசியமாய் உள்ளதென்பதை நியாயப்படுத்துவதன் ஊடாகப் பரந்துபட்டரீதியில் தொலைக்காட்சி வலுவூட்டல் திட்டங்களை ஒழுங்கமைத்து அதனை வெளிக்கொணர்ந்து, இலங்கையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கும் விளைதிறனுக்கும் அவசியமான தொழில்நுட்ப கட்டமைப்புக்கள் இங்கு உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையின் தேசிய இலக்கினையும் நோக்குகளையும் ஒருசேர முகம் செய்வதற்கு மேல்வரும் முன்மொழிவுகளை இங்கு தருதல் பொருத்தமாகும்.

- இலங்கையின் தொலைக்காட்சித் தொழில்நுட்ப வளர்ச்சியின் பிரத்தியேகமாக எண்மத் தொழில்நுட்பத்துக்கு ஒளிபரப்புக்கள் முழுமையானதும் மாற்றமடையாததுமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பவர்களாக இலங்கைவாழ் தொலைக்காட்சிப் பார்வையாளர்கள் உள்ளார்கள் என்பதனைக் குவிவுபடுத்தும் நோக்கில் இலங்கையின் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சூழலில் செயற்படுத்துதலும் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களை ஊக்குவித்தலும்.
- இலங்கையில் தொலைக்காட்சித் தொழில்நுட்பத்துறையில் தரமான தொழில்நுட்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் நம்பிக்கை உணர்வையும் தொலைதூர இலக்கினையும் திட்டமிட்டுக் கொள்ளுதல்
- தொழில்நுட்ப செயலியக்கக் குழுக்களை வடிவமைத்தலும் நவீன தொழில்நுட்ப உபகரணப் பயன்பாட்டை முன்மொழிதலும்